## ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களோடு பயணிப்பவர்கள் தி.மு.கழகத்தினர்!

# ‘சோபா மாடல்’ அரசின் அவலங்களை தொடர்ந்து அம்பலப்படுத்துவோம்!

## சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில் – சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!











**சென்னை, ஜூலை. 7-**

**ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களோடு பயணிப்பவர்கள் தி.மு.கழகத்தினர் ‘சோபா மாடல்’ அரசின் அவலங்களை தொடர்ந்து அம்பலப்படுத்துவோம் என்று சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

சென்னையில், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை, ஜூன் மாதம் முழுவதும் புத்தெழுச்சியுடன் கொண்டாடிய கழக நிர்வாகிகளுக்கான பாராட்டு விழா, மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு கழக நிர்வாகிகளைப் பாராட்டிப் பேசினார்.

விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகம் சார்பாக, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாகவும், எழுச்சியோடும் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய நம் மாவட்டக் கழகச் செயலாளர் வேலு அவர்களுக்கு என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் அனைவரின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கழக நிர்வாகிகள் சந்திப்பு!

4ஆம் தேதி தேர்தல் முடிவுகள் வந்தன. கிட்டதட்ட இரண்டு மாதங்கள் கடந்துவிட்டோம். இந்த இரண்டு மாதங்களாக தினமும் காலையும் மாலையும் அண்ணா அறிவாலயத்திலும் சரி, என் அலுவலகத்திலும் சரி, கழக நிர்வாகிகள், பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் வருகிறார்கள். இளைஞர்கள், கழக நிர்வாகிகளென அத்தனை பேரையும், அத்தனை அணிகளைச் சேர்ந்தவர்களையும் தினமும் மாலையில் இரண்டு மணி நேரம், காலையில் ஒரு மணி நேரம் சந்தித்துக்கொண்டு இருக்கிறேன்.

அப்படி நேற்று சந்தித்துக்கொண்டு இருக்கும்போதுதான், நம் மாவட்டக் கழகச் செயலாளர் இங்கு சொன்னது போல, நேற்று சென்று கேட்டேன், `எதிர்பார்க்கவே இல்லை அவர் வருவார்’ என்று, உடனே ஒப்புக்கொண்டார் என்று சொன்னார். நான் வந்ததில் அவருக்கு மகிழ்ச்சியா இல்லை அதிர்ச்சியா என்று எனக்குத் தெரியவில்லை. நானும் தினமும் ஒரே இடத்தில் நின்று எல்லாரையும் பார்த்துக்கொண்டு இருக்கிறோமே, இன்றைக்கு முத்தமிழ் பேரவையில் எல்லாரையும் சந்திப்போம்.

தினமும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களைச் சந்தித்துக்கொண்டு இருக்கிறோம், நாளைக்கு ஒரு நாள் தென்மேற்கு மாவட்டத்தை மட்டும் சந்திப்போம் என்று நான் நேற்று நினைக்கவில்லை, இப்போது நினைக்கிறேன். அண்ணன் வேலு அவர்கள் என் மீது மிகுந்த அன்பு கொண்டவர், பாசம் கொண்டவர், உரிமை கொண்டவர். அவர் எந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் உடனடியாக நான், அதிலும் தென்மேற்கு மாவட்டம் என் மனதுக்கு மிகவும் நெருக்கமான ஒரு மாவட்டம்.

### என்றைக்கும் ஜெ.அன்பழகனை மறக்க மாட்டேன்!

இன்றைக்குச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்திருக்கிறோம், எதிர்க்கட்சித் தலைவராக நான் உட்கார்ந்திருக்கிறேன் என்றால், சட்டப்பேரவையில் நம் கழகத் தலைவர் அவர்கள் இல்லாமல் எவ்வளவு நான் தவிக்கிறேனோ, அதே அளவுக்கு மறைந்த அண்ணன் ஜெ.அன்பழகன் அவர்களை இழந்தும் தவிக்கிறேன். காரணம், என்னை அரசியலுக்கு இழுத்துக் கொண்டு வந்தவர் அன்பழகன் அவர்கள்தான். அந்த நன்றியை நான் என்றைக்குமே மறக்க மாட்டேன். அவர்கள் குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களும் நிச்சயம் மறக்க மாட்டார்கள். இன்றைக்குப் பல்வேறு இடங்களுக்குச் சென்றிருக்கலாம், அது ரொம்ப நாள் தாங்காது.

நான், நம் ராஜா அன்பழகனைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக்கிறேன். வந்தவுடனே கேட்டேன், ராஜா எங்கே என்று கேட்டேன். இளைஞர் அணி அமைப்பாளர் என் அன்புச் சகோதரர் ராஜா எங்கே என்று கேட்டேன். கொடைக்கானலுக்குப் போய்விட்டார் என்று நம் மாவட்டக் கழகச் செயலாளர் சொன்னார். தமிழச்சி அக்கா காதில் வேறு என்னவோ விழுந்துவிட்டது, பயந்துவிட்டார்கள். என்ன தம்பி எங்கே போயிருக்கிறார்? கொடைக்கானலுக்குத்தான் போயிருக்கிறார், கவலைப்படாதீர்கள், பதற்றப்படாதீர்கள் என்றேன்.

### நன்றி அறிவிப்புக் கூட்டம்!

இந்த இரண்டு மாதங்களில் தினமும் கழகத்தினரைச் சந்தித்துக்கொண்டு இருக்கிறோம். தலைவர் அவர்கள் காலையில் அறிவாலயத்தில் சந்தித்துக்கொண்டு இருக்கிறார்கள். நான் வெற்றிபெற்ற சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் தேர்தல் முடிவுகள் வந்த அடுத்த நான்கு நாட்களில் சென்று நன்றி சொன்னேன். அங்கு இருக்கக்கூடிய நிர்வாகிகளை எல்லாம் சந்தித்து, ஒரு நன்றி அறிவிப்புக் கூட்டம் நடந்தது. அதன் பிறகு இளைஞர் அணி அமைப்பாளர்கள் கூட்டத்தை, அனைத்து மாவட்டங்களில் இருந்தும் அனைத்து அமைப்பாளர்களையும் வரச்சொல்லி, தலைவர் தலைமையில் ஒரு கூட்டத்தை நடத்தினோம்.

அதன் பிறகு நான் கலந்துகொள்கின்ற, ஒரு அரங்கத்தில் நடைபெறக்கூடிய கழக நிர்வாகிகளைச் சந்திக்கக்கூடிய ஒரு கூட்டம் என்றால், அது முதல் கூட்டமாக, தேர்தல் முடிவுக்குப் பிறகு நான் பங்கேற்கின்ற முதல் கழகக் கூட்டம் இந்த தென்மேற்கு மாவட்டத்தில் இன்றைக்கு நடக்கக்கூடிய இந்தக் கூட்டம். முதலில் அதற்கும் இந்த நேரத்தில் அண்ணன் வேலு அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, இந்த ஜூன் மாதம் முழுவதும் கிட்டத்தட்ட 250 நிகழ்ச்சிகள், சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் 256 நலத்திட்ட நிகழ்ச்சிகளை நீங்கள் நடத்தி இருக்கிறீர்கள். ஆட்சியில் இருக்கும்போது நடத்துவது பெரிய விஷயம் கிடையாது. அது ஒன்றும் பெரிய சாதனை கிடையாது. ஆனால், ஆட்சி இல்லாதபோதும் நாங்கள் இன்றைக்கும் மக்களோடுதான் நிற்கிறோம், மக்கள் பக்கம் நிற்கிறோம், மக்கள் பணிகள்தான் எங்களுக்கு முக்கியம் என்று சொல்லி, அதைச் செய்துகாட்டுகிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அதில் முதன்மையான மாவட்டம் நம் தென்மேற்கு மாவட்டம் என்று சொல்வது மிகப்பெரிய ஒரு பெருமை.

### கலைஞரின் உடன்பிறப்புகள்!

ஆட்சியில் இல்லை என்ற உடனே மற்ற கட்சிகள் எல்லாம் என்ன செய்திருப்பார்கள்? வீட்டுக்குள்ளே சென்று பூட்டிக்கொண்டு தூங்க ஆரம்பித்திருப்பார்கள். அடுத்த ஐந்து வருடம் கழித்து வெளியே வருவோம்; அப்படித்தான் மற்ற இயக்கங்கள் எல்லாம் இருந்திருக்கும். ஆனால், நாம் மற்றவர்களை மாதிரி கிடையாது. நாம் கலைஞரின் உடன்பிறப்புகள். நம் தலைவர் நம்மை அப்படி வளர்க்கவில்லை. எந்த நிலையானாலும் மக்களோடு என்றைக்கும் நிற்போம் என்பதைத் தொடர்ந்து நிரூபித்துக்கொண்டு இருக்கக்கூடிய தொண்டர்கள், நம் உடன்பிறப்புகள் நீங்கள்.

அது வெற்றியோ தோல்வியோ, வீதிக்கு வந்து மக்களுக்காக உழைப்பவர்கள்தான் உண்மையான கலைஞரின் உடன்பிறப்புகள் என்று மீண்டும் மீண்டும் நாம் நிரூபிப்போம். அதற்கு இந்த அரங்கத்தில் இருக்கக்கூடிய நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு உதாரணம், ஒரு எடுத்துக் காட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், நாம் பார்க்காத வெற்றியும் கிடையாது, நாம் சந்திக்காத தோல்வியும் கிடையாது. வெற்றி வந்தால் தலைக்கணத்தில் நாம் ஆடியதும் கிடையாது. தோற்றுவிட்டால், வீட்டில் உட்கார்ந்து முடங்கி அடங்கியதும் கிடையாது. என்றைக்குமே மக்கள் பணிக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.

இதுதான் நம் கலைஞர் நமக்குச் சொல்லிக் கொடுத்தது. அந்த வழியில்தான் நம் தலைவர் அவர்கள் நம்மை வழிநடத்திக்கொண்டு இருக்கிறார். ஏனென்றால், தேர்தல் முடிவுக்கு பிறகு இன்றைக்கு ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். என்னென்ன கூத்துகள் எல்லாம் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமை என்ன ஆயிற்று என்பதையும் இன்றைக்குப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். கிட்டதட்ட பாதியாக உடைத்துவிட்டார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர்களால் தொட்டுப் பார்க்க முடிந்ததா? யாராலும் முடியாது, எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது, நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

ஆனால் என்ன ஒரு அழகு என்றால், நாம் முன்பு இருந்ததை விட, ஆளுங்கட்சியாக இருந்ததை விட, இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கும்போதுதான் இன்னும் வேகமாக, இன்னும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறோம். இன்னும் உறுதியோடு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். அதுதான் தி.மு.கவின் அழகு. அதுதான் இந்த இயக்கத்தின் பெருமையும்.

### 60 நாளில் ஏதாவது ஒரு திட்டம்?

அ.தி.மு.கவை இவ்வளவு எளிதாக அசைத்துப் பார்க்கிறோமே, ஆனால் ஏன் தி.மு.கவை நம்மால் கொஞ்சம் கூடச் சீண்டிப் பார்க்க முடியவில்லை யென்று இன்றைக்கு இருக்கக்கூடிய ஆளுங்கட்சி கிட்டதட்டத் திணறிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால், இன்றைக்கு ஏராளமான அவதூறு குற்றச்சாட்டுகளையும் தினந்தோறும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்த சோஃபா மாடல் ஆட்சி அமைந்து கிட்டத்தட்ட 60 நாள்களுக்கு மேல் ஆயிற்று. நாம் யோசித்துப்பார்க்க வேண்டும் மக்களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தை இந்த 60 நாளில் கொடுத்து இருக்கிறார்களா? நான் சட்டமன்றத்தில் பேசினேன். மகளிர் உரிமைத் தொகையை நிறுத்திவிடாதீர்கள். அதைத் தயவுசெய்து கொடுங்கள். அதுமாதிரி தமிழ் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கான கல்வி ஊக்கத்தொகை நாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் அதை நிறுத்திவிடாதீர்கள் என்று சொன்ன உடனே அந்தத் திட்டத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

### முதல் நாள் நான்கு கையெழுத்து!

நம் திட்டங்களை அப்படியே தொடர்ந்து கொண்டு இருக்கிறார்கள் இன்றைக்கு வந்த அரசு. ஏதாவது புதிதாகக் கொடுத்து இருக்கிறார்களா? ஏதாவது புதுத் திட்டம் கொடுத்து இருக்கிறார்களா? நினைத்துப் பாருங்கள் 2021 என்ன நிலைமை? கோவிட் பெருந்தொற்று, நிதி நெருக்கடி அந்த நிலைமையில்தான் நாம் ஆட்சிக்கு வந்தோம். அன்றைக்கு நம் தலைவர் அன்றைக்கு முதலமைச்சர் ஆனவுடனே முதல் நாள் நான்கு கையெழுத்துப் போட்டார்.

கொரோனா நிவாரண நிதி 4,000 ரூபாய் உடனடியாக நம் அரசு அன்றைக்கு கொடுத்தது. முதலமைச்சர் கொடுத்தார். முதல் நாள் முதல் கையெழுத்துப் போட்டார், மகளிருக்கு விடியல் பயணத் திட்டம். பெட்ரோல் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்துக் காட்டினார் நம் தலைவர். ஆவின் பால் விலையை 3 ரூபாய் குறைத்தார் நம் தலைவர். அதுமட்டுமல்ல, கொரோனா சிகிச்சைக்காகத் தனியார் மருத்துவமனையிலும் அரசு மருத்துவக் காப்பீடு செல்லும் என்று நம் தலைவர் அன்றைக்கு அறிவித்தார்.

ஆனால், இன்றைக்கு வந்த ஆட்சியாளர்கள் என்ன செய்துகொண்டு இருக்கிறார்கள்?

### ஆய்வுக்குச் சென்றால் ‘ரீல்ஸ்!’

எப்படியோ ரீல்ஸ் போட்டு ஆட்சிக்கு வந்துவிட்டோம். அதனால், இன்றைக்கு இந்த ஆட்சியையும் ரீல்ஸ் போட்டே நடத்திவிடுவோம் என்று எதற்கெடுத்தாலும் ரீல்ஸ். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குப் போனாலே, பாதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன தொகுதி என்று அவர்களுக்கே தெரியவில்லை. பக்கத்துத் தொகுதிக்கு சென்று நன்றி சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். வாக்காளர் சொல்கிறார்கள், நீங்கள் இந்தத் தொகுதி கிடையாது பக்கத்துத் தொகுதியில் நன்றி சொல்லுங்கள் என்று.

அமைச்சர்கள் ஆய்வுக்குச் சென்றால் அங்கேயும் ரீல்ஸ். முதலமைச்சரின் அலுவலகத்திலும் ரீல்ஸ் போடுகிறார்கள். முதலமைச்சரைப் பார்க்கப் போகிறவர் எல்லாம் ரீல்ஸ் எடுத்துப் போடுகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு ரீல்ஸ் ஆட்சியாக இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டு இருக்கிறது.

எங்கு பார்த்தாலும் கரண்ட் கட். இன்றைக்கு எப்படி இவ்வளவு நேரம் கரண்ட கட்டாகாமல் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஜெனரேட்டரில் ஓடிக்கொண்டு இருக்கிறதா? எங்குப் பார்த்தாலும் இன்றைக்கு பவர் கட். திரும்பும் பக்கமெல்லாம் இன்றைக்குப் பாலியல் வன்கொடுமைகள். அதுவும் ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினரில் ஆரம்பித்து, அவர்களின் நிர்வாகிகள் வரைக்கும் ஒவ்வொருத்தரும் இந்த குற்றச்சாட்டுகளில், இந்த வன்முறைகளில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த அரசின் அமைச்சர் ஒருவர் சமீபத்தில் செய்த கூத்தை நாம் அத்தனை பேரும் பார்த்து அதிர்ச்சி அடைந்தோம். `தக் லைஃப்’ என்று போட்டு ஒரு ரீல்ஸ் போடுகிறார். ஐ.பி.எல் மேட்ச் பார்க்கப் போகும்போது 500 ரூபாய் நோட்டை வைத்து ஒரு மொபைல் போன், கிரெடிட் கார்டு இதையெல்லாம் வைத்து, ஒரு மாத்திரையைப் பொடியாக்கி, என்னவென்று கேட்டால், குழந்தைக்கு உடம்பு சரியில்லை, காய்ச்சல், பாராசிட்டமால் மாத்திரையைப் பொடியாக்கி கொடுத்துக்கொண்டு இருக்கிறேன் என்று ஒரு அமைச்சர் சொல்கிறார்.

இதற்காக இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்று பார்த்தீர்கள் என்றால், எந்த நடவடிக்கையும் கிடையாது. ஆனால், அவர் என்ன பொடியாக்குகிறார் என்பதை ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும், நாம் கண்கூடாகப் பார்த்தோம். நம் அத்தனை பேருக்கும் தெரியும். அந்த அமைச்சர் மேல் ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா? எந்த நடவடிக்கையும் இந்த அரசு எடுக்கவில்லை.

### ஆளுங்கட்சி நிர்வாகியே புகார்!

இன்னொரு பக்கம் அரசு வழக்கறிஞர் நியமனத்தில் இன்றைக்கு லஞ்சம் தலைவிரித்து ஆடிக்கொண்டு இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. ஆளுங்கட்சியின் வழக்கறிஞர்கள் அணி நிர்வாகி ஒருவர் ஒரு புகார் கொடுத்திருக்கிறார். நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருக்கிறார். அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு லட்சக்கணக்கில் பணம் வாங்கி இருக்கிறார் என்று அந்தக் கட்சியின் நிர்வாகியே இன்றைக்குப் புகார் கொடுத்திருக்கிறார். இதுவரைக்கும் எந்த நடவடிக்கையும் இல்லை.

இன்றைக்கு அமைச்சர்கள் ஒவ்வொருத்தரையும் பார்த்தீர்கள் என்றால், என்ன அவர்களுடைய பயோடேட்டாவை எடுத்துப் பாருங்கள், அடிதடி புகார் இருக்கிற ஒருவர் அமைச்சர். இன்னொரு அமைச்சரின் மேல் நில அபகரிப்புப் புகார் அவரும் ஒரு அமைச்சர். இன்னொருத்தர் வேலை வாங்கித் தருகிறேன் என்று சொல்லிப் பணம் பறித்தது என்று ஒரு அமைச்சர். இதெல்லாம் கூடப் பரவாயில்லை சட்டமன்றத்தில் உட்கார்ந்து எதிரே பார்க்கும் போது பார்த்தீர்கள் என்றால், ஒரு அமைச்சர் திருட்டு விசிடி விற்றவர். இன்னொரு அமைச்சர் பிளாக்கில் டிக்கெட் விற்றவர். இன்னொரு அமைச்சர் பிளாக்கில் லாட்டரி டிக்கெட் விற்றவர்.

இவர்கள் எல்லாம் இன்றைக்கு அமைச்சர்களாக சட்டமன்றத்தில் பெயர் சொல்லத் தேவையில்லை உங்களுக்கே தெரியும் மக்களுக்கும் தெரியும். இப்படிப் பட்டியல் நீண்டு போய்க்கொண்டே இருக்கிறது. இவர்களெல்லாம் யார் என்று பார்த்தீர்கள் என்றால், இவர்களைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கே தெரியவில்லை. முதலமைச்சருக்கும் தெரியவில்லை எங்களுக்கும் தெரியவில்லை. யார் அமைச்சர், யார் சட்டமன்ற உறுப்பினர் என்று தெரியவில்லை. ஆனால் இவர்கள் யார் மேலேயும் இங்கு இருக்கக்கூடிய அரசு ஒரு வழக்கு கூடப் போடவில்லை.

ஆனால், நம் இயக்கத்தைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள், இன்றைக்குக் களத்தில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இளைய தலைமுறை (Gen Z) இளைஞர்கள், தன்னிச்சையாக வந்து இருக்கக்கூடிய இளைய தலைமுறை (Gen Z) இளைஞர்கள் எல்லாம் இன்றைக்குக் குறி வைத்து அவர்கள் மேலெல்லாம் இந்த அரசு பொய் வழக்கு போட்டுப் பயமுறுத்தப் பார்க்கிறார்கள்.

### உருட்டல் மிரட்டல்களுக்கு பயப்படாத இயக்கம் தி.மு.க.!

நான் இந்த ஆட்சியாளர்களுக்குச் சொல்வது, நீங்கள் இல்லை, உங்க தாத்தாவே வந்தாலும் தி.மு.க.காரன் இந்த உருட்டல் மிரட்டல் வேலைக்கு எல்லாம் பயப்பட மாட்டான் அதற்கெல்லாம் பயப்படக்கூடிய ஆட்கள் நாங்கள் கிடையாது.

ஏன், நேற்று முன்தினம் என்ன நடந்தது? நம் முன்னாள் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களைக் கைது செய்தார்கள். கைது செய்து அவரைக் கூட்டிக்கொண்டு சென்று என்ன சொல்லியிருக்கிறார்கள்? உங்கள் வீட்டுக்கு ஒரு சோஃபா அனுப்பி வைக்கிறோம், நீங்கள் ராஜினாமா செய்துவிட்டு எங்களுடைய கட்சியில் வந்து சேர்ந்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நம் அனிதா அண்ணன் ரொம்பத் தெளிவாகவே, சொல்லிவிட்டார் எனக்கு உங்கள் சோஃபா எல்லாம் தேவையில்லை, எங்கள் தளபதி என்ன சொல்கிறாரோ, எங்கள் தலைவர் என்ன சொல்கிறாரோ அதன்படிதான் நான் கேட்பேன் என்று அதையும் அடித்து உடைத்துவிட்டோம். நம் வழக்கறிஞர்கள் ஆளுங்கட்சியின் அந்தச் சதித்திட்டத்தையும் இன்றைக்கு முறியடித்துக் காட்டிவிட்டார்கள்.

### இளநீர்க் கடை நகைச்சுவை!

ஒரு படத்தில் நீங்கள் ஒரு நகைச்சுவைக் காட்சியைப் பார்த்திருப்பீர்கள். கவுண்டமணி ஒரு இளநீர் கடை வைத்திருப்பார். எதிர் பக்கத்திலேயே செந்திலும் ஒரு இளநீர் கடை போட நினைப்பார். கவுண்டமணி அவர்களிடம் நிறைய இளநீர் இருக்கும். அவர் உதவியாளராக நம் அண்ணன் வடிவேல் அவர்கள் இருப்பார். எதிர்க் கடையில் போட்டிருக்கக்கூடிய செந்தில் அவர்களுக்கும் வடிவேலுக்கும் ஒரு புரிதல் வந்துவிடும். என்ன செய்வார் ஒவ்வொரு இளநீராகக் கயிறு கட்டி எதிர்க் கடைக்கு அனுப்பிவிடுவார், அவர் பெரிய கடைக்காரர் ஆகிவிடுவார். இன்றைக்கு அந்த வேலையை இந்த த.வெ.க அரசு செய்துகொண்டு இருக்கிறது.

இவ்வளவும் செய்துவிட்டு எதுற்கெடுத்தாலும் தி.மு.கவும் அ.தி.மு.கவும் கூட்டணி சேர முயற்சி செய்தார்கள், தினமும் காலையில் எழுந்த உடனே இதுதான் அவர்களுக்கு வசனமே. அதுமட்டுமில்லை இன்றைக்கு அவர்கள் ஆட்சியை கவிழ்க்க, நாம் முயற்சி செய்துகொண்டு இருக்கிறோமாம். இவர்கள் ஆட்சி நடக்கிற லட்சணத்தைப் பார்த்தால், நாமெல்லாம் ஒன்றும் செய்யத் தேவையே இல்லை மக்களே நிச்சயம் விரைவில் கவிழ்த்து விட்டுவிடுவார்கள். எவ்வளவு நாள் தாங்கிக் கொள்ள முடியும்?

ஒவ்வொரு நாளும் அவர்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினரை இழுக்கப் பார்க்கிறோம் என்று நம்மைப் பற்றி கூறுகிறார்கள். யார் சட்டமன்ற உறுப்பினர் என்றே தெரியாது ஐயா, அவரை எப்படி இழுக்க முடியும்? ஆனால் உண்மையில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது? இன்றைக்கு அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை ஒவ்வொருவராக இளநீர் இழுப்பது மாதிரி இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு, இன்றைக்கு இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்கள் இழுத்துக்கொண்டு இருக்கிறார்.

முதலமைச்சர் சட்டமன்றத்தில் பேசும்போது பேசினார், விடமாட்டேன், தொடமாட்டேன், தொட்டவனை விடமாட்டேன் என்று சொன்னார். சொன்னதை இன்றைக்குச் செய்துகொண்டு இருக்கிறார். ஒரு அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினரைக் கூட விடமாட்டேன், அதுவும் குறிப்பாக ஊழல் வழக்கு யார் யார் மேல் இருக்கிறதோ அவனையெல்லாம் விடமாட்டேன், வேறு யாரும் தொட்டுவிட விடமாட்டேன், நான் மட்டும்தான் தொடுவேன் என்று சட்டசபையில் சொன்னதை நாங்கள் கூட நினைத்தோம். சரி, பஞ்ச் டயலாக்தான் பேசுகிறார் என்று.

எங்களுக்கு சில நேரம் சந்தேகம்கூட ஏற்படுவதுண்டு. நாம் சட்டமன்றத்துக்குத்தான் வந்திருக்கிறோமா? இல்லை ஏதாவது திரையரங்கில் முதல் நாள் முதல் காட்சி படம் பார்க்க வந்திருக்கிறோமா? அந்த நிலைமையில்தான் இன்றைக்குச் சட்டமன்றம் நடந்துகொண்டு இருக்கிறது.

அன்றைக்கு முதலமைச்சர் சொன்னதை இன்றைக்குச் செய்துகாட்டிக்கொண்டு இருக்கிறார். `தூய சக்தி’ `தூய சக்தி’ என்று சொன்னார். `தூர்ந்த சக்தி’ என்றார். பெயர் சொல்வதற்கே கூச்சப்பட்டார். அதனால்தான் நம் தலைவர் சொன்னார்கள், `தூர்ந்த சக்தியிடமிருந்து இழுத்துக்கொண்டு இருக்கிறீர்களே, இப்படி காய்ந்து போன சக்தியாக இருக்கிறீர்களே’ என்று நம் தலைவர் சொன்னார்.

### கல்லாப்பெட்டி கூட்டணி!

நாம் பா.ஜ.கவைச் சொல்வோம் வாசிங் மெஷின் என்று, இன்றைக்கு அதற்குப் போட்டியாக ஒரு குட்டி வாசிங் மெஷினாக இந்த அரசு, த.வெ.க அரசு நடந்து கொண்டு இருக்கிறது. கல்லாப்பெட்டி கூட்டணி. நான் மறந்தாலும் மக்கள் மறக்க மாட்டார்கள். நாம் இதை ஒவ்வொரு நாளும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். கடந்த தேர்தலில் தோற்றுவிட்டோம் என்று சொல்கிறோமே, ஒன்றை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். தேர்தலில் நாம் எதிரி யார் என்று தெரியாமல் இருந்துவிட்டோம். இப்போது தெரிந்துவிட்டது. எதிரியைத் தோற்கடித்துவிட்டோம். யாரைத் தோற்கடிக்க வேண்டும் என்று வேலை செய்தோமோ, அவர்களைத் தோற்கடித்துவிட்டோம். ஊரெல்லாம் சென்று ஓட்டு கேட்டோம். தெருத்தெருவாக சென்று கேட்டோம், நான் மாவட்ட மாவட்டமாக, தொகுதி தொகுதியாக சென்றேன். 40 நாள் சென்றேன். நாம் வீட்டுக்குள் ஓட்டுக் கேட்க மறந்துவிட்டோம்.

நம் போனில் அதை பதிவு செய்ய மறந்துவிட்டோம். இப்போது எங்களுக்கு எதிரி யார் என்று தெரியும். அடுத்த தேர்தலில் சும்மாவெல்லாம் விட்டுவிட மாட்டோம்.

இதுதான் இன்றைக்கு இந்த சோஃபா மாடல் அரசின் லட்சணம். ஆனால் இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால் இதெல்லாம் அவர்கள் கூடப் புதிதாகக் கூட்டணி வைத்திருக்கிறார்கள் பார்த்தீர்களா, நம் தலைவர் பெயரைச் சொல்லி, நம் திராவிட மாடல் அரசின் சாதனைகளையெல்லாம் சொல்லி, வாக்கு வாங்கி, நம் உடன்பிறப்புகளின் உழைப்பால் இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராகி இன்றைக்குச் சில பேர் அமைச்சராகவே ஆகிவிட்டார்கள். அவர்களெல்லாம் யாராவது வாயைத் திறக்கிறார்களா என்று பார்த்தீர்கள் என்றால், விமர்சனம் செய்வது கிடையாது. ஏனென்றால், சோஃபாவைப் பிடுங்கிக்கொண்டு போவார்கள் அல்லவா? அதனால் இன்றைக்கு இந்தக் கூத்தையெல்லாம் வாயை மூடிக் கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

### தொடர்ந்து அம்பலப்படுத்துவோம்!

அடுத்து வருகின்ற நாட்களில், நாம் மக்களிடம் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டும். அண்ணா சொன்னது மாதிரி, பதவி என்பது நம் தோளில் இருக்கிற துண்டு மாதிரி. ஆனால் கொள்கை என்பதுதான் நம் இடுப்பில் கட்டியிருக்கக்கூடிய வேட்டி. அதுதான் ரொம்ப முக்கியம்.

மிசாவையே பார்த்தவர்கள், அவசரநிலையை பார்த்தவர்கள் தி.மு.க.வினர் தொண்டர்கள். இவையெல்லாம் எம்மாத்திரம்? இவற்றையெல்லாம் தூசு போல தட்டிவிட்டுப் போய்க்கொண்டே இருப்போம். நேற்று வந்த அந்தக் கட்சியின் மிரட்டல், உருட்டல்களுக்கெல்லாம் பயப்படுகிற கட்சிக்காரர்கள் தி.மு.க கிடையாது. அதற்கெல்லாம் வேறு யாரையாவது பார்த்துக்கொள்ளுங்கள். என்றைக்குமே களத்தில் நிற்போம், மக்களோடு நிற்போம். ஆகவே, இவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் ஒற்றுமையோடு கழகப் பணிகளில், மக்கள் பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நம் தலைவரின் வழிகாட்டுதலின்படி, எப்போதுமே நான் உங்களோடு நிற்பேன், உங்களோடு தோளோடு தோள் கொடுத்து நிற்பேன். நாம் ஒவ்வொருவரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த சோஃபா மாடல் அரசின் அவலங்களையெல்லாம் மக்களிடம் தொடர்ந்து அம்பலப்படுத்துவோம்.

தேர்தல் மூலமாக ஜனநாயக அடிப்படையில், மறுபடியும் நம் தலைவர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியை நிச்சயம் தமிழ்நாட்டில் அமைப்போம்.

கலைஞர் அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு, மிகச்சிறப்பான நலத்திட்ட உதவிகளெல்லாம் செய்த உங்கள் அத்தனை பேரையும் மீண்டும் வாழ்த்தி, கலைஞர் புகழ் ஓங்கட்டும். இந்நிகழ்ச்சியை மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்டக் கழகத்துக்கும் நம் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் வேலு அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து, வந்த மாவட்ட நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் த.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திரசேகர், நந்தனம் வேதா, சத்யா, மலர், அன்பழகன், தங்கம், பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, நந்தனம் மதி, ஏழுமலை, கோ.சு.மணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வில்லவன், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வி சௌந்தரராஜன், அம்பேத்கர், எம்.ஆறுமுகம், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சரவணன், கணேஷ் பாண்டியன், கதிரவன், அந்தோணி, பானு சலீம், விஜய் வெங்கடேஷ், வடிவேல், சத்தியமூர்த்தி, சண்முகசுந்தரம், வெங்கட்ராமன், முத்தமிழ் பேரவை அறக்கட்டளைத் தலைவர் ராமானுஜம், இளைஞர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் உமாசங்கர், அஸ்வின் குமார், விக்னேஸ்வரன், வட்டக் கழகச் செயலாளர்கள் துரை பார்த்திபன், பொன்னுசாமி, மாமன்ற உறுப்பினர்கள் கீதா முரளி, ரேவதி, விமலா கிருஷ்ணமூர்த்தி, பாஸ்கர், கோமதி மணிவண்ணன், கீர்த்திகா பாஸ்கர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜெகதீஷ், திவான், மணிரத்தினம் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.